| O.S.No. 246/2021 | DW2: திரு. ராஜேந்திரன்<br>த/பெ. திரு. வேணுகோபால் | 16-03-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. நான் 5–ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும் என்றால் கையெழுத்து மட்டும் போடுவேன். இந்த வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் பிரதிவாதி என்ன பதில் போட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் நான் முதல் விசாரணையில் என்ன சொல்லியுள்ளேன் என்று எனக்கு தெரியாது. எனக்கு இந்த வழக்கில் எனது மகனை பற்றி மட்டுமே தெரியும். எனது மகன் என்ன சொல்லியுள்ளார் என்று எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் அவர் பைனான்ஸில் பணம் வாங்கியுள்ளேன், கையெழுத்து போடு என்று சொன்னார். எனது மகன் இந்த வழக்கை பற்றி சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்பதால் நான் சாட்சியம் அளிக்க தகுதியற்றவர் என்று சொன்னால் சரியல்ல.

2. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை சொல்லிக்கொடுத்ததன் பேரில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பைனான்ஸ் நிறுவனத்தின் மீது எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான், எனது மனைவி, மகன், மருமகள் ஆகிய அனைவரும் சேர்ந்து ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்படுகிறோம் என்று சொன்னால் சரியல்ல. என் மனைவி ரிஜிஸ்டார் ஆபிஸ் சென்று ஆவணம் பதிவு செய்து கொடுத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னு மனைவி கையெழுத்துதான்.

3. நான் சொத்தினை கிரையம் செய்து கொடுக்கிறேன் என்று சொல்லி ரிஜிஸ்டார் ஆபிசில் கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்றால் இல்லை, பணம் கொடுத்ததால் கையெழுத்து போட்டேன். எனது பெயரிலும், எனது மனைவி பெயரிலும் கிரைய ஒப்பந்தம் பதிவான அன்று எனது வங்கி கணக்கிற்கும், எனது மனைவி பெயரில் உள்ள வங்கி கணக்கிற்கும் தனித்தனியாக பணம் வந்து சேர்ந்தது என்றால் வந்திருக்கலாம். எந்தெந்த தேதியில் எவ்வளவு பணம் எனது மகன், எனது மருமகள் வங்கி கணக்கில் வந்தது என்று எனக்கு தெரியாது. சுகண்யா என்பவரது பெயரில் கிரைய ஒப்பந்தம் எழுதி ரத்து செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. ராமகிருஷ்ணனும், சுகண்யாவும் வாதி நிறுவனத்தில் என்ன பேசிக்கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

4. நானும், எனது மனைவியும் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வாதி நிறுவனத்தை போய் பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆனால், அருள் என்பவர் என்னையும் என் மனைவியையும் வந்து பார்த்தார் என்றால் இல்லை. நாங்கள் சரியாக பதில் சொல்லாததால் எனக்கும், என் மனைவிக்கும் தனித்தனியாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் அறிவிப்பு அனுப்பியது உண்மை, ஆனால் அருள் எங்களை பார்க்கவில்லை. அருள் என்பவர் ரிசிட் பைனான்ஸின் மேலாளர் என்றால் அது எகக்கு தெரியாது. வழக்கறிஞர் அறிவிப்புக்கு நாங்கள் பதில் அறிவிப்பு அனுப்பினோம். அந்த பதில் அறிவிப்பில் என்ன அனுப்பினோம் என்று எனக்கு தெரியாது. நான் சட்டப்படி கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி அதற்கான கிரைய தொகை வங்கியின் மூலம் பெற்றுக்கொண்டதால் சட்டப்படி கிரையம் பதிவு செய்து கொடுக்க நாங்கள் கடமைப்பட்டவர்கள் என்று சொன்னால் சரியல்ல.

5. நானும், என் மனைவி, மகன், மருமகள் சேர்ந்து பணத்தினை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது மருமகளும், மகனும் என்ன தேதியில் எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு பதிலுரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் எனது மகனும், மருமகளும் தயார் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். நான் எனது மகன் கையெழுத்து கேட்டதால் நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்றாலும், மற்றபடி இந்த வழக்கு பற்றிய விஷயங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றாலும் சரிதான்.

**மறு விசாரணை** : இல்லை.

ஒம்/– ராஜேந்திரன்

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.16 17:13:01 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**